www.tamilarangam.net

# சிந்தனை

பங்குனி 1989



## SINTHANAI 2/89 March/April 1989

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# சர்வதேச பெண்கள் தினம்

சர்வதேசப்பெண்கள் தினம் மார்ச் 8.

1912 ம் ஆண்டு அமெரிக்காவில் லொறன்ஸ் நகரில் தமது உரிமைகளுக்காக நீண்ட தியாகங்கள் மிக்க போராட்டத்தில் வெற்றியீட்டிய நெசவு ஆலைப்பெண்தொழிலாளர்கள் உலகப் பெண்களின் உரிமைப்போராட்ட சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தனர். ஊதியஉயர்வுக்காக ஆரம்பிக்கப்பட்ட அவர்களின் வேலைநிறுத்தப்போராட்டம் சகலபெண்களின் ஆதரவைப்பெற்று பெண்களின் உரிமைப்போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது. இந்த மறுமலர்ச்சியின் விளைவாக 1912இல் ஜேர்மனியில் ஸ்ருட்காட்நகரில் தோழியர் கிளெரா செற்கின் தலைமையில் சர்வதேசப்பெண்கள் ஊர்வலம் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து 77வருடங்களாக உலகப்பெண்கள் இத்தினத்தை தங்களின் தினமாகக் கொண்டாடுகின்றார்கள். அன்றுலொறன்ஸ் நகரில் வறுமையை ஒழிக்கவும் வாழ்வுமலரவும் ( Bread and Roses ) அவர்கள் செய்த போராட்டம், பெண்ணுரிமைப்போராட்டத்திற்கும் வர்க்கப்போராட்டத்திற்கும் உள்ளஉறவை எமக்கு உணர்த்துகின்றது.

www.tamilarangam.net

லொறன்ஸ நகரத்துப்பெண்தொழிலாளர்களின் போராட்ட கீதம், இன்றைய பெண்நிலைவாதிகளின் இலட்சியகீதமாக அமையவேண்டும் என்பதுதான் எமது அவா......

மகிழ்ச்சி பொங்கும் நாட்களை, நாம்
மலரவைக்க வருகின்றோம்.
இப் பெண்ணினத்தின் எழுச்சிதான்
இனி எம்மினத்தின் எழுச்சியாம்
பலரின் உழைப்பில் சிலர்கள் வாழும்
பாழும் முறையும் ஒழியட்டும்
மண்ணுலக மாண்பு யாவும்
மக்களுக்குச் சொந்தமே
வறுமைப் பிணியும் ஒழியட்டும்
வாழ்வு மலர்ந்து பூக்கட்டும்.

மொழிபெயர்ப்பு 'சிந்தனை'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெண் விடுதலையை முன்னெடுப்பது யார்?



பெண் விடுதலையென்றால் என்ன ? அவர்கள் யாரிடமிருந்து விடுதலை பெறவேண்டும்? . அவர்கள் அடிமைகளாக இருந்தால் அல்லவா விடுதலை பெற வேண்டும். . . உண்மை அப்படியல்லவே. . . பெண்ணானவள் இல்லத்தரசியாம் மனையின் விளக்காம். . . தெய்வமாம் அல்லவா கணிக்கப்படுகின்றாள். இன்று உலகில் பட்டங்கள் பல பெற்று சட்டங்கள் செய்வதெல்லாம் பெண்கள் அல்லவா. . அப்படியென்றால். . . . . இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறிக்கொள்ளும் சில வேலையற்ற பெண்களின் விதண்டாவாதமென்பர் சில ஆண்நிலைவாதிகள். 'எனது மனைவிக்குக் காரோட்டக் கற்றுக் கொடுத்து விட்டேன். இப்போது அவளுடன் நீச்சல் தடாகத்திற்கும் போகின்றோம்'. இது ஒரு மத்தியதரவர்க்க "முற்போக்குவாதி"யின் புழுகு.

'பெண்களை ஆண்கள் அடிமையாக வைத்திருக்கின்றார்கள். சமையல், சயனம், சம்பிரதாயம் என்ற கட்டுப்பாடுகளை உடைத்துக்கொண்டு பெண்கள் வெளியே வரவேண்டும்' [illegible] பெண்நிலைவாதிகளின் கோசமிது. . . . .

www.tamilarangam.net

இவ்வாறான குழப்பங்களுக்கூடாகத்தான் நாம் பெண் ஒடுக்குமுறையென்றால் என்ன? அந்த ஒடுக்குமுறையிலிருந்து அவர்கள் எவ்வாறு தம்மை விடுவித்துக் கொள்ளலாம் என்பதை ஆராய முற்படுகிறோம்.

இன்றைய பொருளாதார அமைப்பு முறையில் சொத்துரிமையை வைத்திருப்பதற்கும் அதைத்தனது சந்ததிகளுக்கு கொடுப்பதற்கும் ஆண் முழு உரிமையையும் பெற்றிருக்கின்றான். சட்டமும் சமயமும் கலாச்சாரமும் ஆணைக் குடும்பத்தின் தலைவனாகவும் பிள்ளைகளின் காப்பாளனாகவும் கணிக்கின்ற அதே வேளையில் சமையல் தொட்டு சகல வீட்டுவேலைகளும் பெண்களின் வேலைகள் என்றும் சொத்துரிமையைப்பபாதுகாக்கும் வாரிசுகளையும் சமூக உற்பத்திக்கு அவசியமான உழைப்பாளிகளையும் பெற்று பராமரித்து வளர்ப்பது பெண்களின் கடமையென்றும் வலியுறுத்துகின்றன.

கல்வி, வேலைவாய்ப்பு, கூலி ஆகியவற்றில் ஆண்களுக்குச் சமமான உரிமைகளைப் பெண்கள் பெறவில்லை. ஏட்டளவில் கல்வியிலச் சகலருக்கும் சமஉரிமை இருக்கின்ற போதிலும் பெரும்பாலான பெண்களின் கல்வி இடைநிறுத்தப்படுகின்றது. பெண்களுக்கு அதிகம் படிப்பு அவசியமில்லை, அவர்கள் மணமாகியவுடன் பிள்ளைகளை பெற்று குடும்பத்தில் அடங்கிவிடப்போகின்றவர்களென்ற எண்ணம் பெரும்பாலானவர்களிடம் நிலவுகின்றது. அப்படிப் பெண்களின் கல்வி தொடர்ந்தாலும் சமையல், தையல், பிள்ளைவளர்ப்பு போன்ற பாட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ங்களே அவர்கள் படிக்க வேண்டியுள்ளது. பெண்களை வீட்டு வேலைகளுக்குத் தயாரிக்கவே இந்தக் கல்வியளிக்கப்படுகின்றது.

இவ்வாறான தடைகளை மீறிப் பெண்கள் கல்விகற்று வேலைக்குப் போனாலும் ஒரு சில குறிப்பிட்ட வேலைகளுக்கே அவர்கள் அமர்த்தப்படுகின்றார்கள். விவசாயத்திலும் மற்றைய தொழில்களிலும் கூட குறைந்த ஊதியமுள்ள வேலைகளே பெண்களுக்கென ஒதுக்கப்படுகின்றன. ஆண்களும் பெண்களும் சமமான வேலைகளைச் செய்யும் சந்தர்ப்பங்களில் பெண்களுக்குச் சமமான சம்பளம் கொடுக்கப்படுவதில்லை.

வெளி வேலைகளில் ஈடுபடும் பெண்களும் வீட்டிலிருக்கும் பெண்களும் சமையல், குழந்தைவளர்ப்பு, துணிதுவைத்தல், துப்பரவு செய்தல் போன்ற வேலைகளைத் தாமே தொடர்ந்து செய்கின்றனர். நாள் முழுவதும் உழைக்கும் பெண்கள் தொடர்ந்தும் வீடுகளில் உழைக்கின்றனர். இது அசாதாரணமாகப் படுவதில்லை. இதன் தொடர்ச்சிதான் தொழிலும் சமூகத்திலும் விரக்தியடையும் ஆண்கள் குடித்துவிட்டும், மனவிகாரமடைந்தும் மனைவியரைத் துன்புறுத்துகின்றனர். அடி உதை ஆகியவற்றை வாங்கிக்கொண்டு நாலுசுவர்களுக்குள் தம் வாழ்க்கையை நடத்துகின்றனர். இதை மீறி வெளியில் வருபவர்களுக்குச் சட்டமும் சமூகமும் அதிகபாதுகாப்பைக் கொடுப்பதில்லை. விவகாரத்துச்சட்டங்களும் சட்டத்தின் விலை

www.tamilarangam.net

யும் பெண்களுக்கெதிராகவே இருக்கின்றன. சமூகம் இவர்களை அனுதாபத்துடன் பார்ப்பதாகவும் இல்லை.

விவாகரத்துச்சட்டம் மட்டுமல்ல, கருத்தடை, கருக்கலைப்பு ஆகியவற்றிற்கான சட்டங்களும் பெண்களுக்கும் பாதகமாகவே இருக்கின்றன. கருத்தடைக்கான சத்திர சிகிச்சைகளும் ஆபத்து விளைவிக்கும் ஊசிமருந்துக்களும் பெண்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றன. ஒரு பெண் தனக்கு வேண்டியபோது ஒரு பிள்ளையைப் பெறுவதற்கும் வேண்டாதபோது விலக்கிக்கொள்ளவும் சட்டமும் சமூகமும் இடம் கொடுப்பதில்லை.

இந்த ஒடுக்கு முறைக்கான அடிப்படைக் காரணிகளை ஆராயும் பொழுது சமூக அமைப்பிலுள்ள புறக்காரணிகளும், ஆண் பெண் இருபாலர்களின் அடிமனங்களில் ஊறியிருக்கும் அகக்காரணிகளையும் நாம் அடையாளம் காணமுடியும்.

வரலாற்று ரீதியாக வளர்ச்சிபெற்ற சமூகப்பொருளாதார உறவுமுறைகளும் அவற்றோடு பின்னிப்பிணைந்துள்ள சமய கலாச்சார சம்பிரதாயங்களும் சட்டங்களும் பெண் ஒடுக்குமுறையின் புறக் காரணிகளாகவும், இவை ஆண்டாண்டுகாலமாக ஆண், பெண் இருபாலர்களின் மனோநிலைகளில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்கள் அகக்காரணிகளாகவும் இருக்கின்றன.

பெண் பலவீனமானவள், புத்தி குறைந்தவள், பாதுகாக்கப்படவேண்டியவள், தண்டிக்கப்படக்கூடியவள், வீட்டிலிருக்க வே

www.tamilarangam.net

ண்டியவள்; குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு அவளுக்கு மட்டும்தான், வெளியுலகில் நடப்பவற்றிற்கு அவளின் அபிப்பிராயம் அவசியமில்லை, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களைக் கொண்டிருக்க வேண்டியவள், ஆண்கள் தம் உரித்து என்று நினைக்கின்ற பெண்களுக்கு 'கற்பு' என்பது மிகவும் அவசியம், மொத்தத்தில் பெண்கள் ஆண்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக 'ஆண்டவனால்' உருவாக்கப்பட்டவர்கள் என்ற எண்ணங்கள் ஆண்களின் மனங்களில் ஊறியிருக்கின்றன.

நாங்கள் பெண்கள், நாம் எதையும் நாம் நினைத்தபடி செய்யமுடியாது. ஊர், உலகம் என்று சொல்லப்படுகின்ற சமூகம் நாங்கள் என்ன செய்கின்றோம் என்பதைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கின்றது. அப்பா, அம்மா, அண்ணன், தம்பி மட்டுமல்ல அடுத்த வீட்டுப் பெண்கள், சந்தியில் நிற்கும் வேலையற்றவர்கள் எல்லோரும் எங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் நாம் என்ன செய்கின்றோம் என்பதை விமர்சிக்கவல்லவா காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் கணிப்பின்படி ஏதாவது தவறாக நடந்து விட்டால் 'மானம்' கெடுவது நான் மட்டுமல்ல, எனது தங்கைமார்கள், எனது குடும்பம் எல்லோரும்தான். தூக்குக்கயிறு, கிணறு, நஞ்சு இவையெல்லாம் எங்களுக்கு விடுதலை தரலாம். அப்படியில்லாவிட்டால் எங்களுக்குச் சூட்டுவதற்கென்று பெயர்களைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்ட ஒரு தனி அகராதியையே அவர்கள் வைத்திருக்கி
றார்கள்.

இது சமூகத்திற்குப் பயந்த பெண்ணின் அவலம்...

பட்டுப்புடவைகள், தங்க நகைகள், வீட்டுச்சாமான்கள் இவை
எல்லாம் எமக்குக் கிடைத்துவிட்டால், மற்றவர்கள் எம்மைப்
பார்த்துப் பொறாமைப்படும்படி நாம் வாழ்ந்தால் வேறு
என்ன வேண்டும். 'பெண் விடுதலையா?, அப்படியென்றால்
என்ன? பிள்ளைகளின் வேலைகளுடன் இரசுகளுக்கும் செலவழிக்
-க எங்களுக்கு நேரமில்லை, 'அவருக்கும்' இதுகள் பிடிக்
காது. பெட்டைக் கோழி கூவி விடிகிறதில்லை, எங்களாலை
என்ன செய்ய முடியும்?'

இது எல்லா வசதியும் படைத்த பெண்ணின் பகட்டு....

பெண்பிள்ளை மாதிரி நடக்க வேண்டும், நாளைக்குப் போற
இடத்திலை சமைக்கத் தெரியாது என்று சொல்லக்கூடாது.
ஆண்பிள்ளையிலை விளக்குமாறு படாமல் கூட்டு, காலைக்
கீழே வைத்துக்கொண்டு பெண்பிள்ளை மாதிரி இரு.....

இது பெண்களுக்குக் கொடுக்கப்படும் புத்திமதி.

இவ்வாறான மனோநிலைமைகளே பெண் ஒடுக்குமுறைக்கான
அகக்காரணிகளாக இருக்கின்றன. இவ்விதமான மனோநிலைகை
-ள் மாற்றமடையும் வரை பெண்கள் தம்மை உணர்வுபூர்வ
மாக விடுவித்துக் கொள்ள முடியாது.

மனிதனின் மனோநிலை மாற்றங்கள் புறச் சூழ்நிலைமைகளிலே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-யே மாற்றமடைகின்றன. ஆண்டாண்டு காலமாக புறச் சூழல்களில் ஏற்பட்ட மனோநிலைகளை ஒரு நொடியில் தூக்கியெறிந்து விடமுடியாது. ஆனால் இந்த அக உணர்வுகளுக்குக் காரணமாக இருக்கும் புறக்காரணிகளை மாற்றுவதன் மூலமே பெண்ணொடுக்குமுறைக்கு ஒரு தீர்வு காணமுடியும்.

நமது சமூகத்திலுள்ள இன்றைய பொருளாதார உறவு முறைகளும் சமூக அமைப்பும் தனியுடமையாளர்களின் நலன்களுக்காகவே செயற்படுகின்றன. இனவொடுக்குமுறை, சாதியொடுக்கு முறை ஆகியவை எப்படி தனியுடமையாளர்களின் நலன்களுக்காகப் பாவிக்கப்படுகின்றனவோ அது போலவே பெண் ஒடுக்கு முறையும் தனியுடமையின் நலன்களுக்காகப் பாவிக்கப்படுகின்றது.

திரண்ட செல்வத்தை சிதறியாமல் வைப்பதற்கும் மேலும் செல்வத்தைக் குவிப்பதற்கும், அன்பு பாசம் என்ற அடிப்படை மனித உணர்வுகளையெல்லாம் விட்டு திருமணம் என்பது ஒரு வியாபாரமாக்கப்பட்டுள்ளது. செல்வக்குவிப்புப் போட்டியில் இறங்கும் ஆண்களின் சீதன வேட்டை பணக்காரப் பெண்களுக்கு விளையாட்டாக இருக்கின்றது. ஆனால் அதற்கு ஈடுகொடுக்க முடியாத பெண்கள் வாழாவெட்டிகளாக வாழ்க்கை நடத்துகின்றார்கள்.

தனியுடமையாளர்களின் சந்ததித் தேவையைப் பூர்த்தி செய்யாத பெண்களையும் பாவிக்க அவர்கள் தயங்குவதில்லை.

www.tamilarangam.net

சமூக உற்பத்தியில் குறைந்த கூலியில் உடலுழைப்பை விற்ப
தற்கு அவர்கள் நிர்பந்திக்கப்படுகின்றார்கள். அவர்களின் உல்
லாச விடுதிகளில் அவர்களின் உடல்களும் விற்கப்படுகின்றன.
கற்பு, கலாச்சாரம் என்பதெல்லாம் ஒரு சிறு பகுதிப்
பெண்களுக்கு அவசியமென்று சொல்லும் சமூகம் மறு பாதி
யிலிருப்பவர்களைப் பெண்களாகவே மதிப்பதில்லை. காரண
ம் அவர்களிடம் அடுத்த சந்ததிக்குக் கொடுக்க ஒன்றும்
இல்லாததுதான்..

இந்தச் சமூகவட்டத்திற்குள் உருவாகும் எண்ணங்கள், கதைகள்
கவிதைகள், சினிமாக்கள் எல்லாம் இந்தச் சிந்தனைகளை
கட்டிக்காத்து வளர்க்கின்றன.

இந்த நிலைமைகளிலிருந்து விடுதலை பெற முனையும் பெண்
நிலைவாதிகளிடம் காணப்படும் சில குழப்ப நிலைமைகளையும்
நாம் கருத்தில் கொள்ள வேண்டியும் இருக்கின்றது.

தம்மை தாமே பெண்நிலைவாதிகள் என்று கூறிக் கொள்ளும்
மத்தியதரவர்க்க குணாம்சங்களைக் கொண்ட பெண்கள்,
பெண்விடுதலை என்பது ஆண்களுக்கெதிரான போராட்டமென
வும், பெண்கள் பாலடிப்படையில் ஒன்றிணைவதன் மூலமே
சமூக மற்றும் குடும்ப ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபட
முடியுமென நம்புகின்றனர். தமது கோரிக்கைகளை ஆண்களு
க்கெதிரான கோரிக்கைகளாகவே முன்வைக்கின்றனர்.
தொடர்ச்சியான வீட்டுவேலை, குழந்தைப்பராமரிப்பு, உயர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கல்வி, வேலைவாய்ப்பு போன்ற கோரிக்கைகளை சமூக மாற்றத்திற்கான கோரிக்கைகளாக முன்வைக்காமல் வெறும் ஆண்களைத்தூற்றும் கோசங்களாக முன்னெடுக்கின்றார்கள். வீட்டுவேலை, குழந்தை வளர்ப்பு போன்ற வேலைகளில் ஆண்களும் சமபங்கெடுக்க வேண்டும் என்ற கோசத்துடன் இவர்கள் நின்று விடுகின்றார்கள். தொழில் செய்யும் ஆண்கள் பெண்கள் இருபாலருக்கும் ஆரோக்கியம்மான சமைத்த உணவை சமூகச் சமயலறைகள் கொடுத்து அவர்களின் வேலைப்பழுவைக்குறைக்க வேண்டுமென்பதையும் வேலைசெய்யும் தாய்மார்களின் வேலை நேரம்குறைக்கப் படவேண்டுமென்பதையும் சகல வசதிகளுடன் கூடிய குழந்தைப்பராமரிப்பு நிலையங்கள் பெண்களுக்கென உருவாக்கப்பட வேண்டுமென்பதையும் இவர்கள் மறந்து விடுகின்றார்கள். இவ்வாறான இந்த வேறுபாடுகளுக்குக் காரணம் வெறும் ஆண்களுக்கெதிரான கோசம் வர்க்கபேதமில்லாமல் சகல பெண்களையும் ஒன்றிணைப்பது போலத் தோன்றுவதாலும் சமூகப் பொருளாதாரத்தில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாமலும் இருப்பதால் ஆபத்தற்ற கோசங்களாக இருக்கின்றன. மறுபுறத்தில் ஆரோக்கிய உணவு வழங்கும் சமூகச் சமயலறைகள், குழந்தைப்பராமரிப்பு நிலயங்கள் ஆகியவை உழைக்கும் பெண்களுக்கு நன்மை பயக்கின்றன.

மேலும் சமூக உற்பத்தியில் ஏற்படும் இலாபத்தின் ஒரு பகுதியை இப்படியாக உழைக்கும் பெண்களின்

www.tamilarangam.net

நலன்களுக்காக ஒதுக்க வேண்டியிருப்பதால் அவை ஆபத்தான கோரிக்கைகளாகின்றன.

மத்தியதரவர்க்க பெண்நிலைவாதிகள் தமது வர்க்கக் கண்ணோட்டத்துடன் பிரச்சனைகளை அணுகுவதை வரலாற்றில் பலமுறை பார்க்கக்கூடியதாக இருந்தது.

அமெரிக்கப்பெண்களுக்கு வாக்குரிமை வேண்டுமென்று போராடிய மத்தியதரவர்க்க பெண்நிலைவாதிகள் கறுப்பு இனத்தவர்களுக்கு வாக்குரிமை கொடுப்பதை எதிர்த்தனர். சார் மன்னன் காலத்தில் உயர்கல்விகற்கும் உரிமைக்காகப் போராடிய உயர்வர்க்கப் பெண்நிலைவாதிகள் வீட்டுப்பணிப் பெண்களுக்கு கூலிஉயர்வு கொடுப்பதை எதிர்த்தனர். பல ஆய பெண்நிலைவாதிகள் பெண்விடுதலைப் போராட்டத்தை வெறும் பால்களுக்கிடையிலான போராட்டமாகக் கொச்சைப்படுத்துகின்றனர். ஆண்களை வெறுப்பதும் பெண்கள்கூட்டுச் சேர்வதும் பெண்விடுதலை என்று அறிமுகப்படுத்துகின்றனர். இவர்களின் குழுக்கள் புத்திஜீவிகளின் வட்டங்களாகச் சீரழிவதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

இந்த நிலைமைகளிலேயே நாம் பெண்விடுதலையை முன்னெடுக்கக்கூடியவர்கள் யார்? என்ற கேள்விக்கான பதிலுக்கு வருகின்றோம்.

சகல பெண்களும் சமுதாயத்திலிருக்கும் பெண்ணொடுக்குமுறையினால் ஏதோவொருவிதத்தில் பாதிக்கப்படுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனியான குடும்பங்களில் ஒடுக்குமுறைக்காளாகும் பெண்கள் அது தமக்கு மட்டும்தான் நடக்கின்றது என்று எண்ணி விதி என்று அழுவதுடன் நின்றுவிடுகின்றனர். சித்தாந்தரீதியாக பெண்ணொடுக்குமுறை பற்றி ஆய்வுகள் செய்யும் பெண்நிலைவாதிகள் தமது கவிதைகள், கட்டுரைகள் மற்றைய செயற்பாடுகள் மூலம் பெண்களை அணிதிரட்ட முயலுகின்றனர். இவர்களுடைய முயற்சிகள் பலபெண்களை உணர்வுபூர்வமாகத் தட்டி எழுப்புகின்றன என்பது உண்மைதான். உணர்வுரீதியாக அறிவுபெறுவது பாதிவிடுதலை என்பது உண்மைதான் ஆனால் அமைப்பாகச்செயற்படாமல் எந்தவிடுதலையும் சாத்தியமாவதில்லை. குடும்பம் என்ற கூட்டுக்குள் இருக்கும் ஆழும் வர்க்கப்பெண்களிலும், சமூகம் கலாச்சாரம் என்ற கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் மத்தியதர வர்க்கப்பெண்களிலும் எந்தவொரு உறுதியான அமைப்பையும் ஏற்படுத்த முடிவதில்லை. பெரும்பாலனவர்கள் அது அவசியமென்று உணர்வதுமில்லை.

தமது உழைப்புச்சக்தியை விற்பதன் மூலமே உயிர்வாழமுடியுமென்ற அடிப்படையில் வாழும் பெண்கள், பெண் என்றமுறையிலும் தொழிலாளி என்ற முறையிலும் இருஒடுக்குமுறைகளுக்குட்படுத்தப்படுகின்றனர். தொழில் செய்யவென்று வீட்டை விட்டு வெளியேவரும் பெண்கள் பொதுவான ஒடுக்குமுறைகளுக்கும் முகம் கொடுக்கின்றார்கள். கூலியில் சுரண்டல், அதிகா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரிகளின் பாலியல் சுரண்டல், பாதையில் பிரயாணம் செய்யும்போது சுரண்டல் என்று எல்லாவிதமான சுரண்டல்களுக்கும் ஆளாகின்றனர். ஆனால் தம்மை போன்ற பல பெண்களுடன் கூடி தமது பிரச்சனைகளைத் தீர்க்க அமைப்பாகி செயற்படும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படுகின்றது.

சமகூலிக்கான போராட்டம், இரவு வேலைக்குமறுப்பு, குழந்தைபராமரிப்பு, சமைத்த உணவு, பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு எதிர்ப்பு, பாதுகாப்பான பிரயாணவசதி இவையெல்லாம் பெண்நிலைவாதிகளின் கோசங்களாக இல்லாமல் போராடிப்பெறவேண்டிய கோரிக்கைகளாக மாறிவிருக்கின்றன.

பெண்தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் ஆண்தொழிலாளர்களுடன் இணைந்து இப்போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

இப்போராட்டங்களினூடு புடம்போடப்பட்ட பெண்கள் சமூகத்தின் மற்றைய ஒடுக்குமுறைகளுக்கும் முகம்கொடுக்கத் தயாராகின்றனர். கணவனால் துன்புறுத்தப்படும் மனைவிகளுக்குப் பாதுகாப்பு, விவாகரத்து, கருத்தடை, கருக்கலைப்பு சட்டமாற்றங்கள், பிள்ளைகள் வயோதிபர் பராமரிப்பு வசதிகள் போன்ற கோரிக்கைகளை அமைப்புரீதியாக போராடிப்பெற முயலுகின்றனர். இவர்களின் போராட்டங்கள் வீட்டிலடைந்திருக்கும் மற்றைய பெண்களையும் வெளிக்கொண்டுவரும்.

இன்றைய சமுதாயமுறையை மாற்றக்கூடிய வர்க்கம் தொழிலாளவர்க்கமாக இருப்பதுபோல இந்தச்சமுதாயமுறையில் ஊறிவிட்ட பெண்ணொடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தை முன்னெடுக்கக் கூடியவர்கள் அமைப்பாகிய பெண்தொழிலாளர்கள்தான்.

—பராசக்தி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சீதனமும் சமுதாய மாற்றமும்

எமது சமுதாயத்தில் பெண்கள் பற்றி விவாதிப்பவர்கள் சீதனம் என்பது முக்கிய பிரச்சினையாக பெண்கள் வாழ்க்கையில் ஊறிப்போயிருப்பதை சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. திருமண வாழ்க்கைக்கு தயாராகும் பெண்களுக்கு தடையாக இருக்கும் இச்சீதனமுறை பல நூற்றாண்டு காலமாக தொடர்ந்து கொண்டிருப்பதும், இதற்கு எதிராக எழுப்பப்படும் குரல்கள் யாவும் சமுதாயக்குறைபாடுகள் முன்னால் அடிபட்டுப்போவதனை நாம் காணக் கூடியதாக உள்ளது. சமுதாயத்தில் சீதனமும் ஒருவகையில் சுரண்டலாக பயன்படுத்தப்படுவதுடன் பெண்கள் இதற்கு கருவியாக பாவிக்கப்படுகிறார்கள். இச்சீதனமுறையால் பெண்களுக்கு எவ்விதத்திலும் பயன் இருப்பதில்லை. மாறாக அவர்கள் ஆண்களின் ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாக இதுவும் ஒரு காரணமாக அமைகிறது.

சீதனம் எப்படி உருவானது என்பதை பார்த்தோமானால், சமுதாயத்தில் தனியுடமை தோற்றம் பெற்றபோது உருவாகிய ஆண் ஆதிக்கம் பெண்களை அடிமைகளாக்கியதில் இருந்து இம்முறை உருவாக வழிவகுத்தது எனலாம். பெண்களை மணமுடிக்கும் ஆண்கள் தமது சொத்துக்களை அதிகரிக்கும் நோக்குடன் பெண்களிடம் இருந்து சொத்துக்களை தம்வசமாக்கத் தொடங்கினர். இந்த நிலைமைதான் நாளடைவில் சீதனமாக பரிணமித்தது எனக் கூறப்படுகிறது. ஆணிடத்தில் பெண் தங்கிவாழ்ந்ததால், ஆண் பெண்ணிடமிருந்து சொத்துக்களை எதிர்பார்த்ததும், நாளடைவில் இது கட்டா

www.tamilarangam.net

யமாகி இன்று பெண்களது வாழ்க்கையை சீரழித்துக் கொண்டிருக்கிறது.

சீதனத்திற்கெதிராக சமுதாயத்தில் முற்போக்கு எண்ணம் கொண்டவர்களால் பல தடவை விமர்சிக்கப்பட்டும், விவாதிக்கப்பட்டும் வந்திருக்கிறது. இதற்கெதிரான எதிர்ப்புக்குரல்கள் கூட இவர்களின் விமர்சனங்களின் அடிப்படையில் தோற்றம் பெற்றிருக்கின்றன. இவற்றை இரண்டு வகையாக பிரித்துப் பார்க்கலாம். முதலாவதாக சீர்திருத்தவாதஅடிப்படையில் அமைவது. மற்றையது புரட்சிகரமாற்றத்தினூடாக அமைவது எனலாம். சீர்திருத்தவாதிகள் முன் வைக்கும் கருத்தில், சீதனத்தை ஆணும், பெண்ணும் பகிஷ்கரிப்பதன் மூலம் இதனை ஒழித்து விடலாம் என்றும், புரட்சிகரமாற்றத்தை முன்வைப்பவர்களின் கருத்துப்படி சமுதாயத்தை மாற்றியமைப்பதன் மூலம் இச்சீதனமுறை முடிவுக்கு கொண்டு வரலாம் எனவும் இருவகைத் தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன.

இதில் நாம் சீர்திருத்தவாதிகளின் கருத்தை எடுத்துப் பார்ப்போமானால், ஆண், பெண் பகிஷ்கரிப்பதன் மூலம் சீதனமுறை ஒழிந்து விடும் என்பது எவ்வளவுதூரம் சாத்தியமாகும் என்பதுதான் கேள்விக்குரியதாக உள்ளது. ஏனென்றால், எமது சமுதாயம் வளர்ச்சியடைந்த அமைப்பாக இல்லாததும், இன்னும் பழமைவாத கருத்துக்களிலிருந்து விடுபடாது இருப்பதுமாகும். சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் சமூக, பொருளாதார பாதுகாப்போ உறுதியாக இல்லை, ஒருவரையொருவர் அண்டி வாழுகின்ற நிலையும், வேலையின்மை, வீடின்மை, நிலமின்மை போன்ற

பிரச்சினைகளும் காணப்படுவதால் பொருளாதாரப் பிரச்சினை பாரியளவு காணப்படுகிறது. அத்துடன் எதிர்கால தமது சந்ததிகளுக்காகவும், தமது பிற்கால வாழ்க்கைக்காகவும் சொத்துக்களை சேகரித்து வைக்கும் மனோபாவமும் பலரிடம் காணப்படுகிறது.

இந்நிலையில் இத்தேவைகளை நிவிர்த்தி செய்யும் சாதனமாக சீதனம் பலராலும் பயன்படுத்தப்படுகிறது. சமுதாயம் வளர்ச்சி பெறாத நிலையில் சீர்திருத்தவாதக் கருத்துக்கள் மூலம் சீதனத்தை இல்லாமல் செய்வதென்பது சாத்தியமற்றதாகும். புறநிலைக்காரணங்கள் மோசமாக உள்ள நிலையில் மனிதர்களின் அகநிலை மாற்றம் பெறுவதென்பது கடினமானதொன்றாகும். வேண்டுமானால் ஒரிருவர் உறுதியாக நின்று சீதனத்தை பகிஷ்கரிக்கலாம். ஆனால் பெரும்பாலானோர் எதிர்கால அச்சம் காரணமாகவும், இதன் காரணமாக உருவாகியுள்ள சொத்து சேகரிக்கும் மனோபாவமும், அவர்களால் சீதன பகிஷ்கரிப்பை மேற்கொள்ள முடியாதிருக்கும்.

எமது சமுதாயத்தில் நிலவும் உறுதியற்ற பொருளாதார வருமானமும், காப்புறுதியின்மையும் எல்லோரையும் வெகுவாகப் பாதிக்கின்றன. பிள்ளைகள் நீண்ட காலத்திற்கு பெற்றோரையும், பெற்றோர்கள் வயதான காலத்தில் பிள்ளைகளையும் சார்ந்து வாழ்கிறார்கள். இந்த நிலையில் பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு திருமணம் செய்து கொடுக்கும் போது தமது பிற்கால வாழ்க்கைக்கு தேவையான வருமானத்தை சீதனம் மூலம் பெற்றுக் கொள்கிறார்கள்.

www.tamilarangam.net

இதைப்போலவே வேலையில்லாதிருப்பவர்கள் சீதனம் மூலம் ஒரு தொழிலை தேடிக் கொள்கிறார்கள் அல்லது சுயமாக தொழில் செய்யத் தொடங்குகிறார்கள். நிலமின்றி இருப்பவரும் வீடின்றி இருப்பவரும் சீதனம் வாங்கி தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்கிறார்கள். தமது சகோதரிகளுக்குச் சீதனம் கொடுக்க வேண்டி சகோதரர்கள் கூட சீதனம் வாங்கித் தான் அதனை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இப்படி எல்லோரும் சீதனத்தை எதிர்பார்த்து இருப்பதற்கு காரணம் சமுதாயத்தின் வளர்ச்சியற்ற தன்மையாகும். இந்த நிலைமையால் பாதிக்கப் படுபவர்கள் சீதனத்தை அழிய விடாமல் அதனை பாதுகாத்து வருகிறார்கள்.

ஐரோப்பிய வளர்ச்சியடைந்த சமுதாயத்தை பார்த்தோமானால் அங்கு இப்படியான நிலைமைகள் இல்லை. பொருளாதார ரீதியான பிரச்சினைகள் அவர்களை வெகுவாகப் பாதிப்பதில்லை. வேலையற்றவர்களுக்கு சமூக உதவி கிடைக்கிறது. வீடில்லாதவர்களுக்கு வீட்டு வசதிசெய்து கொடுக்கப் படுகிறது. உறுதியான காப்புறுதி முறைகளும், ஓய்வூதியமும் இருப்பதால் இறுதிக்காலங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளில் தங்கி வாழ வேண்டிய அவசியம் இல்லை. பிள்ளைகளுக்காக சொத்து சேகரிக்கும் வழக்கம் அங்கு இல்லை. வளர்ச்சியடைந்த சமூகம் ஆகையால் யாரும் யாரையும் அண்டி வாழத் தேவையில்லை. ஆனால் எமது சமுதாயம் இதற்கு முரணாக இருப்பதால், தங்கள் தேவைகளை நிறைவேற்ற சீதனத்தை எதிர்பார்க்கிறார்கள்.

இந்நிலைமையில் சமுதாயத்தை மாற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சமுதாய மாற்றம் சமுதாய வளர்ச்சிக்கு அவசியமாகிறது. சமுதாயமாற்றத்தின் போதுதான் பொருளாதாரப்பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. அங்கு சீதனத்திற்கான அவசியம் இருக்கப்போவதில்லை. இதைவிடுத்து சமுதாயத்தை மாற்றாது, சீர்திருத்தங்கள் செய்வதன் மூலம் சீதனத்தை ஒழிக்கலாம் என்று நினைத்து அதனை பகிஷ்கரிப்பதோ அல்லது வெறுமனே எதிர்த்து வருவதாலோ சீதனம் ஒழியப் போவதில்லை.

— கவிசா

---

சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே

சிந்தனை உருவாகின்றது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சகல விடயங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.


| | |
|---|---|
| ஆசிரியர் குழு, | Editors, |
| சிந்தனை | SINTHANAI |
| ஒல்கா ஸ்ராஸ, 49 | Olga str 49, |
| 7 ஸ்ருட்காட் 1, | 7-Stuttgart 1. |
| மேற்கு ஜேர்மனி. | West Germany. |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தோழர் கொல்வின்

எமது நாட்டில் மார்க்சியத்தத்துவத்தின் முதல் விதைகளை ஊன்றிய தோழர் கொல்வின் ஆர்.டி.சில்வா வின் மறைவு டன் இலங்கை வரலாற்றின் ஒரு சகாப்தம் முடிவடைந்து விட்டது. தென் ஆசியாவின் ஒரு தலைசிறந்த மார்க்சிய மேதையை, புத்திகூர்மையும் நாவன்மையும் படைத்த ஒரு சட்ட ஆலோசகனை, இடதுசாரி இயக்கத்தின் ஒரு மூத்த தலைவனை நாம் இழந்துவிட்டோம்.

1906ம் ஆண்டு இலங்கையின் தென்கோடியில் பலபிட்டிய கிராமத்தில் பிறந்த கொல்வின் ஆர்.டி.சில்வா, தனது

www.tamilarangam.net

படிப்பை இங்கிலாந்தில் முடித்துக்கொண்ட வேளையில் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் ஆட்சியைப்பற்றி நன்கு அறிந்திருந்தார் என்பதை அவர் தமது பி.எச்.டி த் தேர்வுக்காக எழுதிய "இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சி" என்ற ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது. பிரித்தானிய ஆட்சிபற்றிய மற்றைய நூல்களிலிருந்து மாறுபடும் இந்த நூல் இன்று வரைக்கும் ஒரு ஒப்பற்ற ஆய்வாகத்திகழுகின்றது.

அந்நியஆட்சியின் கீழ் நாட்டில் பஞ்சமும் பிணியும் மலிந்திருந்த வேளை நாட்டிற்குத்திரும்பிய இளம் கொல்வின், நாட்டின் சுதந்திரத்திற்காக இயங்கிக்கொண்டிருந்த இலங்கை வாலிபர் சங்கத்திலும் பின்பு சூரியமலர் இயக்கத்திலும் இணைந்து செயற்பட ஆரம்பித்தார்.

முதலாவது உலகயுத்தத்தின் பின் சமாதானம் ஏற்பட்ட தினமான நவம்பர்மாதம் 11ம் திகதி, "பொப்பி"தினமாக ஆங்கிலேய ஆட்சியாளர்களினாலும் அவர்களது அடிவருடிகளாலும் கொண்டாடப்பட்டு வந்தது. துணியினால் செய்த "பொப்பி" மலர்களை மக்களுக்கு விற்று அந்தப்பணத்தினை ஐரோப்பாவில் வாழ்ந்துவந்த ஊனமுற்ற ராணுவ வீரர்களுக்கு அனுப்பி வந்தார்கள். அதற்கு எதிராக சுதந்திர வேட்கை கொண்ட இளைஞர்கள் சூரியகாந்திப்பூக்களை விற்று அந்தப் பணத்தை சமூகசேவைகளுக்குப்பயன்படுத்தினர். இக்காலங்களிலேயே இலங்கையின் கிராமங்களில் மலேரியா நோய் பரவியிருந்தது. இந்த நோயைத்தடுப்பதற்கு டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்காவுடனும் என்.எம்.பெரேராவுடனும் தோழர் கொல்வின் நோய்தடுப்புப்பணிகளில் ஈடுபட்டார். மக்களுடன் இவர்களுக்கேற்பட்ட அனுபவம் அவி

ஆதிக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட வைத்தது.
1935ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி இலங்கை சமசமாஜ
க் கட்சி உருவாக்கப்பட்டது. தோழர் கொல்வின், என்.எம்.பெ
ரேரா, எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, பிலிப் குணவர்தன ஆகியோருடன்
இணைந்து இக்கட்சியை ஆரம்பித்தார். தோழர் கொல்வின் கட்சியின்
தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை பூரணசுதந்திரம் பெறவேண்டும், பெரும் தோட்டங்கள் உட்
பட சகல உற்பத்தி சாதனங்களும் பொதுவுடமையாக்கப்பட
வேண்டும். இன மத மொழி சமத்துவமுள்ள சமதர்ம சமுதாயம்
உருவாக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடுகளுடன் இக்கட்சி உரு
வாக்கப்பட்டது.

இலங்கை மக்கள் வெள்ளை, கறுப்புத்துரைகளினால் தீவிரமாக ஒடுக்
கப்பட்டு வந்த காலம் அது. தோட்டத் தொழிலாளரின் நாட்கூலி
12 சதமாக இருந்தது. நகரப்பகுதி தொழிலாளர்கள் 8 மணித்தி
யால வேலை, விடுமுறைகள் என்பன பற்றி அறியாதவர்களாக இரு
ந்தார்கள்.

இலங்கை சமசமாஜக்கட்சியின் ஆதரவுடன் இலங்கைத் தோட்டத்
தொழிலாளர் சங்கமும், நகரப்பகுதித் தொழிலாளர் சங்கங்களும்
அமைக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு 8 மணித்தியால வேலை,
விடுமுறைகள், அலவன்ஸ்கள் போன்றவற்றை உறுதிப்படுத்தும் சட்டங்
கள் இன்று அமுல் நடத்தப்படுவதற்குக் காரணம் அன்று தொழிலா
ளர்கள் இந்த அமைப்புக்களினூடாகச் செய்த தியாகமிக்க
போராட்டங்களே. இப்போராட்டங்களில் தோழர்
கொல்வின் ஆற்றியபங்கு அளப்பரியது. பிரசித்திபெற்ற முல்லோயாத்
தோட்ட வேலைநிறுத்தத்தில் தியாகி கோவிந்தனின் கொலைவிசா
ரணையின் போது 25 மணித்தியாலங்கள் வாதாடிய தோழர் கொ



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லின் பொலிசாருக்கெதிரான தீர்ப்பினைப்பெற்றார். மக்கள் மத்தி
யில் ஏற்பட்டுவந்த எழுச்சியை பொறுக்காத அரசு சமதர்மமனப்
பான்மைகொண்ட சகலருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கத்தலை
ப்பட்டது. பெருந்தோட்டத்தொழில் கற்று வந்த பிரேஸ்கேடில்
என்ற அவுஸ்திரேலிய இளைஞன் தொழிலாளர்களிடம் பரிவாகவும்
சமசமாஜக்கட்சியின் ஆதரவாளனாகவும் இருப்பதைக்கண்ட ஆங்கிலே
ய அரசு அவனை நாடுகடத்த உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்
த்த சமசமாஜக்கட்சியினர் பிரேஸ்கேடிலை மறைத்து வைத்து அரசு
க்குச் சவாலவிடுத்தனர். உயர்நீதிமன்றத்தில் இதற்கெதிராகவாதா
டிய தோழர் கொல்வின் நாடுகடத்தல் உத்தரவை மீளப்பெறச்செ
ய்தார். சார். பாரன்ஜயதிலக்காவின் தலைமையிலிருந்த ஆங்கில
அடிவருடிமந்திரிசபையும் பதவிதுறக்கும் நிர்பந்தத்திற்குள்ளானது.

இவருடைய ஏகாதிபத்திய விரோதநடவடிக்கைகளின் இரண்டாவது
உலகயுத்தத்திற்கு அரசு ஆதரவு திரட்டியபோது உச்சக்கட்டத்தை
படைந்தது. சோவியத் ருசியாவைப் பாதுகாப்பது தவிர மற்றைய
எல்லா வகையான யுத்தங்களும் ஏகாதிபத்திய நலன்களுக்காகச்
செய்யப்பட்ட யுத்தங்கள் என்ற அடிப்படையில் சமசமாஜக்கட்சி
யினர் அரசின் நடவடிக்கைகளை எதிர்த்தனர். இதனால் சமசமாஜக்
கட்சி சட்டவிரோதமாக்கப்பட்டதுடன் கொல்வின் ஆர். டி.சில்வா,
என், எம். பெரேரா, எட்மன்ட் சமரக்கோடி, பிலிப் குணவர்தன
ஆகியோர் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டனர். 1942இல்
தோழர் கொல்வினும் சிறையிலிருந்து தப்பி இந்தியா சென்றனர்.
இந்தியாவில் அன்று நடைபெற்றுக்கொண்டிருந்த சுதந்திரப்போரா
ட்டத்தில் கோவிந்தன் என்ற பெயருடன் கொல்வின் மும்முரமாக
ஈடுபட்டார்.

www.tamilarangam.net

1945இல் உலகமகாயுத்தம் முடிவடைந்த பின்பு தோழர் கொல்வினும் மற்றைய தோழர்களும் நாடுதிரும்பினர். தோழர் கொல்வினின் போராட்ட வாழ்க்கையை ஒரு சிறுகட்டுரையில் உள்ளடக்கிவிடமுடியாது....

1953இல் அவர் வழிநடத்திய ஆகஸ்ட் கர்த்தால் போராட்டம் இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட ஒரு வர்க்க எழுச்சியாகும். டி.எஸ். சேனநாயக்காவின் மந்திரிசபையை கொழும்பில் நங்கூரமிட்டிருந்த பிரித்தானியக்கப்பலுக்குள் ஓடி ஒளியச்செய்த போராட்டம் அது. தனிச்சிங்களச்சட்டத்திற்கெதிராக தனது உயிரையும் மதியாது போராட்டம் நடத்தியவர். கொழும்பு நகரசபைமண்டபத்தில் தனிச்சிங்களச்சட்டத்திற்கெதிராக சமசமாஜக்கட்சியினர் நடத்திய கூட்டத்தில் காடையர்கள் அவர்மீது குண்டொன்றை வீசினர். அதைத் தடுத்த தோழர் ரெஜிமெண்டிஸ் தனது கையை இழந்தார்.

"இரு மொழி, ஒரு தேசம்—ஒரு மொழி, இரு தேசங்கள்" என்று அவர் தீர்க்கதரிசனத்துடன் கூறியதை ஆட்சியாளர்கள் செவிமடுக்காததால் இந்த நாடு இரத்தக்காடாகியது.

தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்தும், மலையகமக்களுக்கு வாக்குரிமையும் ஏட்டளவிலாவது கிடைக்கும் தருணத்தில் தோழர் கொல்வின் மறைந்துவிட்டார். பிரிந்திருந்த இடதுசாரி இயக்கங்கள் ஒன்றிணையும் பணிகள் வெற்றிபெற்றுக் கொண்டுவரும் பொழுது அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டிய தோழர் கொல்வினின் மறைவு பேரிழப்பாகும். நமது நாட்டின் வரலாற்றில் ஒரு மாமேதையாக வாழ்ந்த தோழர் கொல்வினின் குரல் அவர் உருவாக்கிய ஒவ்வொரு மார்க்சியவாதியின் இதயத்திலும் ஒலித்துக் கொண்டிருக்கும். அவரின் பணிகளைத் தொடருவதே அவருக்கு நாம் காட்டும் மரியாதை.

ஒரு தலைவனுக்கு - ஒரு தோழனுக்கு எமது பிரியாவிடைகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை



## ஆசிரியர் கருத்து

சிந்தனையின் கடந்த மூன்று இதழ்களின் ஆசிரியகருத்துக்களிலும் நமது மக்கள் சுதந்திரமாகவும் பகிரங்கமாகவும் தமது கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியிருந்தோம்.

"..மக்கள் பங்குகொள்ளும் ஆகக்குறைந்த ஜனநாயகத்தினும் மக்களை நிரந்தர ஊமைகளாக்கும் அராஜகத்திற்குமிடையிலான போட்டியே தமிழ்ப்பேசும் மக்கள் சந்திக்கும் இந்தத் தேர்தலாகும். அராஜகத்திற்கு அரசியல்ரீதியாக முற்றுப்புள்ளி வைப்பதற்கும், திசைமாறிச் செல்பவர்களைத் திருத்தி மக்கள்அரசியலுக்குக் கொண்டுவரவும் தமிழ்மக்கள் இந்தத் தேர்தலைப் பாவிக்கவேண்டும்." என சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

பகிஷ்கரிப்பாளர்களின் துப்பாக்கிகளுக்கும், குண்டுவெடிப்புகளுக்கும், மிரட்டல்களுக்குமிடையில் 65%க்குமதிகமான மக்கள் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் சுதந்திரத்தை நிலைநாட்டியுள்ளதுதான் மண்ணில் இன்றுள்ள யதார்த்தம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது, மக்களின் சக்தியில் நம்பிக்கை வைக்காமல் சும்பா க்கிக் குழலிலிருந்தே சக்திபிறக்கின்றது என்ற உன்மத்தமா ன சித்தாந்தங்களை உருப்போட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு ம், தாய்நாடல்லாத வேறு எந்தநாட்டிலாவது 'குடியுரி மைக்காட்' அல்லது 'அமெரிக்கலாட்டரி விசா' கிடைக்கி ன்றதா என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கின்றவர்களுக்கும் வேண்டப்படாத அல்லது ஜீரணிக்க முடியாததாகத்தான் இருக்கும்.

முற்போக்கு எழுத்தாளனின் பேனா மக்களுக்கு ஒரு அடி முன்னே போகவேண்டும். மக்கள் நடவடிக்கைகள் எடுத்த பின்பு அவர்கள் செய்தவற்றை தமது தேவைக்கேற்ப வியா க்கியானம் செய்வது முற்போக்கு எழுத்தாளருக்கு அழகல்ல, அப்படி எழுதுவதற்குப்பெயர் "மக்கள் பின்செல்லும் சந்தர்ப் பவாதம்"

வாய்பேசா ஊமைகளாக இருந்த எமது மக்கள் தேர்தலில் பங்குகொள்ள வேண்டுமென்று நாம் எழுதியபோது, புஊமை யான சித்தாந்தவாந்தியெடுத்தவர்களும், குழம்பிய குட்டை களில் தூண்டில் போட்டு மேலும் தம்மைக் குழப்பிக்கொ ண்டவர்களும் இவை வெறும் 'கதிரைகளுக்கான போட்டி, திசைதிருப்பல் நடவடிக்கைகள்' என்றெல்லாம் எழுதிவிட்டு, தேர்தல் முடிவுகளின்பின்பு -திசைமாறிப்போன சிலர் திரு ந்தி வந்ததைக் கண்டபின்பு—தமது ராகம் (அபஸ்வரம்) களை மாற்றிப் பாடுகின்றார்கள்.

www.tamilarangam.net

"முன்னைய தேர்தலில் மோசடி இருந்தது...பின்னைய
தேர்தல் கொலைக்களத்தில் நடந்தது...ஆனால் "-----"
இவர்கள் வெற்றிபெற்றது மக்களின் தீர்ப்பு. இது மற்றவர்
களின் வெற்றியைச் செல்லாமற் செய்துவிட்டது...அவர்கள்
சரி, ஒழுக்கச்சரியில்லை..இவர்கள் பிழை, ஒழுக்கம்பிழையில்
லை..." என்று கயிற்றில் நடக்கும் சார்க்கஸ்காரனைப்
போல தளம்புகின்றார்கள். காற்றடிக்கும் பக்கத்திற்குச்
செல்வது காற்றாடி, அது பேறவாக இருக்க முடியாது.
எமது மக்கள் அராஜகத்திற்கு எதிராக தீர்ப்பு வழங்கியு
ள்ளார்கள். திசைமாறிச்செல்பவர்கள் திருந்தி மக்களை
மதிக்கும் அரசியலுக்கு வரவேண்டுமென்றும் குரல் கொடுத்
துள்ளார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தை முற்போக்கு அணிகள் முறையாகப்
பாவிக்க வேண்டியது அவசியமாகும். அரசியலில் சித்தாந்த
த்துடன் கூடிய மூலோபாயமும் மக்களைத்திரட்டும் தந்தி
ரோபாயமும் அவசியம். சித்தாந்தத்தை மட்டும் உருப்போ
ட்டுக் கொண்டு தந்திரோபாயத்தைக் கைவிடுபவர்கள் அதி
தீவிரவாதிகளாகி மக்களிடமிருந்து அந்நியப்பட்டுவிடுகின்றார்கள்.
சித்தாந்தத்தைக் கைவிட்டு தந்திரோபாயத்தை மட்டும்
கையாளுபவர்கள் சந்தர்ப்பவாதிகளாகின்றனர்.

சித்தாந்தத்தின் அடிப்படையிலான மூலோபாயத்தில் இறுக்க
மாகவும் மக்களின் அரசியல் வளர்ச்சிக்கும் யதார்த்த சூழ்

www.tamilarangam.net

நிலைமைகளுக்கேற்பவும் தந்திரோபாயங்களைப் பாவிப்பவர்கள் அரசியலில் முன்னேறுகின்றார்கள். மக்கள் மத்தியில் நம்பிக்கையான, ஆழமான தளங்களை உருவாக்கவும் அரசியல் உணர்வுள்ள அணிகளைத் தயாரிக்கவும் கிடைத்த சந்தர்ப்பம் பாவிக்கப்பட வேண்டும்.

போராட்டப்பாதையில் அடுத்த செயற்பாடுகள் இவைகளாகத்தான் இருக்க முடியும்

# கொலைகளை நிறுத்துங்கள்

– மேர்ஜ்

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் யாழ். கிளை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மிகுந்த நெருக்கடிகளின் மத்தியிலும் அச்சுறுத்தல்கள், பழிவாங்கும் கொலைகள், வன்செயல்கள் போன்ற மனித உரிமைகள் மீறல் மத்தியிலும் மக்கள் உற்சாகத்துடன் சென்று இவ்வடக்கு முறைக்கும் வன்செயல்களுக்கும் எதிராக அமைதி, யுத்த நிறுத்தம் கோரி வாக்களித்துள்ளார்கள். பொது மக்களின் ஜனநாயக வேண்டுகோளைக் செவிமடுத்து அனைத்து இயக்கங்களும் பழிக்குப் பழிவாங்கும் வன்செயல்கள், கொலைகளில் ஈடுபடாது புரிந்துணர்வுடன் செயல்படும்படி இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் வேண்டுகிறது.

மாகாணசபைத் தேர்தலுக்குப் பின் பழி வாங்கும் அத்துமீறிய அடக்குமுறைகள் வளர்ந்து கொண்டு வரும் சூழ்நிலையை நிராகரிக்க 15-2-89 நாடாளுமன்றத் தேர்தலை மக்கள் பாவித்துள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இப்படியான நடைமுறைகளில் தொடர்ந்து ஈடுபடாது உடன் யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடிக்குமாறு சகலரையும் வேண்டுகிறோம்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலித்து பொறுப்புடன் செயல்பட வழிவிடல் வேண்டுமென்றும், அனைவரையும் இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் வேண்டிக் கொள்கிறது.

நன்றி திசை 11-3-1989 யாழ்ப்பாணம்

www.tamilarangam.net

# மலையகத்தில் தேர்தல்!

நடைபெற்று முடிவடைந்த தேர்தல் மலையகத்தைப் பொறுத்த வரை மலையகமக்களுக்கு ஏமாற்றமாகவே அமைந்து விட்டது. மலையகத்திலிருந்து ஒரு தமிழ்ப் பிரதிநிதிகளாவது தெரிவுசெய்யப்படவில்லை. மலையகத்தில் போட்டியிட்ட மலையக அமைப்புக்கள் ஒன்று கூட வெற்றி பெறவில்லை. முப்பது தமிழ் வேட்பாளர்கள் பல அமைப்புக்களிலிருந்து போட்டியிட்டிருந்தும் ஒருவரும் வெற்றி பெறாமல் தோல்வி அடைந்து உள்ளனர். இதில் தெரிவு செய்யப் பட்ட உறுப்பினர்கள் அனைவரும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களாவர்.

தமது வாக்குரிமையை இழப்பதற்கு முன் 1947ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஏழு தமிழ்ப் பிரதிநிதிகளை தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பிய இம் மலையக மக்கள் நாற்பது வருடம் கழித்து கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிட்டுள்ளார்கள். இத்துரதிர்ஷ்டமான நிலைமைக்கான காரணத்தை சகல மலையக அமைப்புக்களும் பொறுப்பேற்க வேண்டியதுடன், அவர்களுக்கு ஒரு படிப்பினையாக இத்தேர்தல் அமைந்திருக்கின்றது.

இத்தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிட்டது. இத்தேர்தலில் ஏழு வேட்பாளர்களை மலையகத்தில் நிறுத்தியிருந்தது. தேசிய தொழிலாளர் சங்கம், செங்கொடி சங்கம்,

www.tamilarangam.net

ஈ.பி.ஆர்.எல்.எப் போன்றன ஐக்கிய சோசலிச முன்னணியின் கீழ் ஒரு வேட்பாளர் வீதம் நிறுத்தி போட்டியிட்டன. ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தனது வேட்பாளரை சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக நிறுத்தியிருந்தது. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஏழு பேரையும், முஸ்லிம் காங்கிரஸ் நான்கு பேரையும் வேட்பாளராக நியமித்து இருந்தன. நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் இவர்கள் போட்டியிட்டனர். இத்தேர்தலில் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வெற்றி எதிர்பார்க்கப் பட்டாலும், ஐ.தே.கட்சியுடன் அது ஏற்படுத்திக் கொண்ட கூட்டு அதன் தோல்விக்கு வழி வகுத்தது எனலாம்.

நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.காங்கிரஸின் வேட்பாளர்கள் தோல்வி அடைந்ததும், ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியும் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். ஏனென்றால் நுவரெலியா மாவட்டம் கூடுதலான தமிழ் வேட்பாளர்களை கொண்டிருந்த பகுதியாகும். இத் தேர்தலின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது பிரச்சாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்குமாறு மலையகத் தமிழ் மக்களை கேட்டுக் கொண்டதும், தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு சிங்கள மக்களையும் கேட்டுக் கொண்டது, இந் நிலைமை வேறுவிதமாக அமைந்தது. சிங்கள மக்கள் தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்களிக்காமல் விட்டதும், மலையகதமிழ் மக்கள் ஐ.தே.கட்சியின் வேட்பாளர்களுக்கு தமது வாக்குகளை பாரபட்சமின்றி அளித்ததும், ஐ.தே.கட்சிக்கு எதிரான வாக்குகள், பல அமைப்பு வேட்பாளர்களால் சித

www.tamilarangam.net

றிப் போனதும், ஐ.தே.கட்சியின் வெற்றிக்கு சாதகமாக அமைந்து விட்டது. விகிதாசார முறையிலமைந்த இத் தேர்தலில் இந்த அமைப்புக்களின் ஒற்றுமையின்மையும், இ.தொ.காவின் கூட்டும் மலையக மக்களின் பாராளுமன்ற அரசியலில் மாற்றத்தை அளித்துவிட்டன.

இத்தேர்தலில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் போட்டியிட்டு சந்திரசேகரனுக்கு 10590 வாக்குகள் கிடைத்தது குறிப்பிடத் தக்கது. (இவர் முன்பு இ.தொ.காங்கிரஸில் இருந்து வெளியேறியவர். தற்சமயம் மலையக மக்கள் முன்னணி என்கிற புதுக் கட்சியை நிறுவியுள்ளார். இத்தேர்தலில் முக்கியமாக கருதப்படுவது விகிதாசார முறையிலமைந்திருப்பதாலும். இம்முறை இ.தொ.காங்கிரஸின் தோல்விக்கு காரணமாக அமைந்ததும், மலையகமக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்ய வாய்ப்பை தவற விட்டு, பெரும்பான்மை இன மக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்ய வாய்ப்பாகவும் அமைந்து விட்டது. மலையக மக்களைப் பொறுத்தவரை இ.தொ.காங்கிரஸையோ, அல்லது ஐ.தே.கட்சியையோ வேறுபடுத்தி பார்க்கும் நிலையில் அவர்கள் இத்தேர்தலில் வாக்களிக்கவில்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியும் ஐ.தே.கட்சியோடு ஒட்டிக் கொண்டு விட்டதாலும் மலையக மக்களிடையே ஐ.தே.கட்சி முதன்மை வகிக்கவும் சாதமாகிப் போய்விட்டது.

கடந்த வருட இறுதியில் பிரஜாவுரிமையை மீள வழங்கும் சட்டமூலம் ஒன்றை ஐ.தே.கட்சியும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. இது முக்கியமாக

தேர்தலில் தனது வாக்குகளை தக்க வைத்துக் கொள்ளவும், இதன்மூலம் ஜனாதிபதி தேர்தலிலும், அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலும் ஐ.தே.கட்சியின் வெற்றிக்கான ஒரு காரணமாக அமைந்துவிட்டதில் சந்தேகமேயில்லை. ஐ.தே.கட்சியுடனான இணைவில் இ.தொ.காங்கிரஸ் தனது அருமையை இழந்துவிட்டபடியால் தேர்தலுக்குப் பின் தன்னை புனரமைக்க முடிவு செய்துள்ளது. இதன் வெளிப்பாடுதான் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் தொண்டமான் இ.தொ.காங்கிரஸ் அதிகாரிகளை பதவி மாற்றம் செய்ய முன்வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மலையக மக்களின் சந்தாப் பணத்தில் வாழ்ந்து கொண்டு அவர்களை அரசியல் மயப்படுத்தாது விட்டுவிட்ட ஏனைய மலையக அமைப்புக்கள் இத்தேர்தலில் நிறைய பாடங்களை கற்றுக் கொண்டுள்ளார்கள். பிரஜா உரிமை இல்லாததை தமக்கு சாதகமாக வைத்து காலம்பூராகவும் அவர்களை ஒரு உருப்படியான போராட்டத்திற்கு அணி வகுக்காது, தமது நலன்களை மட்டும் பார்த்துக் கொண்டிருந்த இவ்வமைப்புக்கள் இனியும் பிளவுபட்டு நிற்பதோ, அல்லது மீண்டும் தமது பழைய நடவடிக்கைகளை தொடருவார்களேயானால் இவர்களை மலையக மக்கள் மறந்து விடும் நாள் அதிகம் இல்லை. இவ்வமைப்புக்கள் இத்தேர்தலில் பெற்றிருக்கும் வாக்குகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

மலையகத்தில் இன்னும் வாக்காளராக பதியப்படாமல் பலர் இருக்கிறார்கள். இவர்களுக்கு பிரஜா உரிமை இருந்தும் வாக்களிக்கும் தகுதியற்று இருக்கி

www.tamilarangam.net

றார்கள். வாக்காளராக பதிவு செய்ய இவர்கள் முயற்சி செய்த போதும் பல காரணங்கள் காட்டி தட்டிக் கழிக்கப் படுகிறார்கள். அத்துடன் மலையக அமைப்புகள் இவ்விடயத்தில் ஏனோதானோ என்றிருப்பது கவலைக்குரிய தொன்றாகும். தேர்தலில் மட்டும் மலையக மக்களை நாடி ஓடுவதும் பின் அவர்களைப் பற்றி அக்கறையற்று இருப்பதும் இம்மக்களை அல்லற்பட வைக்கின்றது. பிரஜா உரிமை வழங்குவதற்கான சட்டமூலம் நிறைவேற்றப் பட்ட பின்னர் இது இழுபறியாக உள்ள நிலைமையை மாற்றவேண்டும். ஏனென்றால் நாம் இலங்கைப் பிரஜை ஆகத் தகுதியானவர்கள் என்றிருந்தும் பல விடயங்களில் இவர்கள் புறக்கணிக்கப் படுகிறார்கள். நிர்வாக இயந்திரங்களின் ஆமை வேகமும், அலட்சியப் போக்கும் இம்மக்களை நிம்மதியற்றவர்களாக வாழ வைக்கின்றன.

பிரஜா உரிமை வழங்கப்படுவதன் மூலம் இம்மக்களின் பிரச்சினை தீர்ந்து விட்டதாக இயலில்லை. இப்பிரஜா உரிமையைக் கொண்டு அவர்கள் ஏனைய உரிமைகளைப் பெற இவர்களுக்கு வாய்ப்பு இருக்கின்றது. மலையகத்திலுள்ள அமைப்புகள் இவ் விடயத்தில் துரிதமாக ஈடுபடவேண்டும். இம்மக்களின் எதிர் காலம் இனியும் இருட்டாக இருப்பதற்கில்லை. இம்மக்களோடு இணைந்து கொண்டு இவர்களை அரசியல் மயப்படுத்துவதன் மூலம் இம்மக்களினை முதலாளித்துவக் கட்சிகளின் பின்னால் அணி திரள்வதை தடுக்கமுடியும்.

— ஜி. கங்காதரன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

ඌව කම්කරු සරණ සෙවන
ஊவா தொழிலாளர் உதவி நிலையம்
UWA
UVA WORKERS' AID CENTRE
(AFFILIATED TO THE CO-ORDINATING SECRETARIAT FOR PLANTATION AREAS)
19/C. BADULUPITIYA ROAD. BADULLA (Sri Lanka)
PHONE: 055-2098

Your Ref: Our Ref: 21.02.1989,

ஆசிரியர்,

சிந்தனை,

அன்புடையீர்,

தங்களின் சிந்தனை இதழ்களை தொடர்ந்தும், படித்து வருகிறோம், மிகவும் கருத்தாழமிக்க கட்டுரைகளையும், சிந்தனை விழிப்புணர்ச்சி ஏற்படுத்தக் கூடிய விடயதானங்களையும், தாங்கி வருகிற நடுநிலையான பத்திரிகை என்று பாராட்டுகிறோம், தொடர்ந்தும் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பிவையுங்கள் என வேண்டுகிறோம்,

ஏ. கே. வேலவன்,

இணைப்பாளர், ஊவா நிலையம்,

ஆசிரியர், சிந்தனை,

......முற்போக்காளருக்கும், முற்போக்கு அம்சங்களுக்கும் ரதனி டம் கொடுக்கும் "சிந்தனை" நிச்சயமாக தலைவர் எஸ். ரி. என். நாகரத்தினம் பற்றிய கட்டுரையைப் பிரசுரித்து அவரது பணியைக் கௌரவிக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்

6, மகாத்மாகாந்திவீதி,
யாழ்ப்பாணம்.

கே. சுப்பையா

(தோழர். எஸ். ரி. என். நாகரத்தினத்தின் பணிகளை கௌரவிக்கும் கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும். )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனையை தொடர்ச்சியாகப் படித்து வருகிறேன். கார்த்திகை மாத இதழை இப்போது விமர்சிக்கிறேன்.
மகசின் சிறையிலிருக்கும் வாசகர் கடிதத்திலிருந்து, தமிழ் சஞ்சிகைகளை வாசிக்க முடிகிறது என்பதை அறிந்து ஆச்சரியமாக இருக்கின்றது. இந்த வாசகரைப் போல மலையகத்தில் கைது செய்யப்பட்டு சிறையிலிருக்கும் இளைஞர்களைப் பற்றி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இலங்கை, இந்திய அரசுகளோ, ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட தமிழ் மாநில அரசோ கண்டு கொள்ளாமலே இருக்கின்றன. தேர்தலுக்கு சில காலம் முன்பதாக பொதுமக்களின் கால்களை அரசியல்வாதிகள் தேடிக் கொள்வது வழமையானதால் பொதுத் தேர்தலுக்கு முன்னாலாவது யாராவது இவர்களைப் பற்றி அக்கறைப்படுகிறார்களா என்று பார்ப்போம்.

மூன்றாம் பக்கத்தில் சிந்தனையில் வெளியாகும் கதை, கட்டுரைகளின் கருத்துக்கள் ஆசிரியர் கருத்துக்களாக வேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் என்ன எழுதினாலும் ( பிற்போக்குத்தனத்தை ஆதரித்தோ, பயங்கரவாதத்தை ) பிரசுரிப்பீர்களா?. உங்களுக்கு சரியாக தென்படும் கருத்துக்களையே நீங்கள் பிரசுரிக்க வேண்டும். அப்படியில்லையென்றால் எல்லோரினதும் சுயகருத்துக்களுக்கும் இடமளித்து, வாசகர்களையும் குழப்புவதோடு நீங்களும் சரியான நிலைப்பாட்டில் இல்லையென்றாகும். சரியான கருத்துக்களை பிரசுரிக்கப்படும் போது அவற்றை ஆசிரியர் குழுவும் ஏற்றுக்கொள்ளக் கூடாதா?.

ஆசிரியர் கருத்தில் கிழக்கிலங்கைத் தேர்தல் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. கிழக்கிலங்கை வாக்குச் சாவடிகளில் அங்கே இந்திய ராணுவம் வாக்காளர்களாக மாறியது பற்றியோ தேர்தல் ஆரம்பித்து, பின் பகல் வரை அதிக ஆர்வம் காட்டாதிருந்த தமிழ் மக்கள், முஸ்லீம் வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பார்த்தபின் முண்டியடித்துக் கொண்டு வாக்களித்தது பற்றியோ ஆசிரியர் ஏன் குறிப்பிடவில்லை. இந்த இரண்டு குறிப்புகளும் எழுதப்பட்டிருந்தால், அக்கட்டுரையின் அநேக வரிகள் (உதாரணம்: ஐக்கிய அரசியலையே மக்கள் விரும்புகின்றார்கள், மக்களின் அபிலாசைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது போல்) உண்மையான கருத்துக்களாக மாற்றமடைந்து இருக்கும்.

ஆறாம் பக்கத்தில் ஏழாம், எட்டாம், ஒன்பதாம் வரிகள் யதார்த்தமானவைதானா?. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்றத் தேர்தல் சகதிக்குள் இறங்கும்போது அவற்றை பகிஷ்கரிக்கும்படி

www.tamilarangam.net

யும், இலங்கை அரசின் ஆளுமையின் கீழான எந்தப் பதவிகளுக்காகவும் வால் ஆட்ட வேண்டாம் என்றும் கடந்த காலங்களில் வீர முழக்கமிட்ட விடுதலைக் குழுக்கள் இப்போது அதே அரசாங்கத்தின் கீழான பதவிகளுக்காக தேர்தலில் குதித்தன. தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பட்டியலில் இந்த விடுதலைக் குழுக்களும் சேர்ந்து சந்தர்ப்பவாதிகளாக மாறிவிட்டார்கள் என்பதைக் காட்டவில்லையா? சந்தர்ப்பங்களுக்கேற்ப நிறம் மாறிக் கொள்ளுபவர்கள் பதவி அதிகாரங்களுக்காக தமிழ்மக்களுக்கெதிராகவும் (முற்றுமுழுதாக) மாறமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?.

தேர்தலில் பங்கு பற்றிய வேட்பாளர்களுக்கும், பங்குபற்றிய மக்களுக்கும் எதிரான கொலைவெறி நடவடிக்கைகள் தொடர்ந்ததாக குறிப்பிட்டு இருக்கும் ஆசிரியர் தேர்தலில் பங்கு பற்றியவர்களினால் பங்குபற்றாதமக்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் கொலைவெறி நடவடிக்கைகளையும் குறிப்பிட்டிருக்கவேண்டும். அராஜக சக்திகள் குறுகிய நோக்கத்துடன் செய்யும் குரூரத்தனமான நடவடிக்கைகளையும் கண்ட பின்னும் அவற்றுக்கெதிராக குரல் கொடுக்காமல் இருக்கமாட்டோம் என்று குறிப்பிட்டிருக்கும் ஆசிரியர் தற்போது, இந்திய ராணுவக் கட்டுப்பாட்டில் வடக்கில் உலாவும் குழுக்கள் தங்களது பழிவாங்கல்களை குரூரத்தனமாக நடத்திக்கொண்டிருப்பதைப் பற்றி சஞ்சிகையின் எந்தப் பக்கத்திலும் குரல் கொடுக்காதது ஏன்? இப்படியான கண்டு கொள்ளாமைகள் 'சிந்தனை' ஒரு குழுவைமட்டும் திட்டவட்டமாக ஆதரிக்கிறது என்பதைக் உறுதிப்படுத்துகிறது.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தை பற்றி குறிப்பிடப் பட்டிருப்பது சரியே. மாகாணசபையில் பங்கு கொண்ட இயக்கங்களுக்கான சில வார்த்தைகள் நியாயமானவையாகவே உள்ளன. சிறையிருக்கும் வாசகர்களின் கடிதத்தை சஞ்சிகையில் பிரசுரித்தும் கூட, இவர்களின் விடுதலையிலும் அக்கறை எடுக்க வேண்டுமென்பது பற்றி குறிப்பிடவில்லையே?

சிறுகதையில் போட்டிக்கொலைகள் பற்றி குறிப்பிட்ட கதாசிரியர் அவற்றுக்கான அடிப்படைக்காரணங்களையும் கோடிட்டுக் காட்டியிருக்கலாம். ஒரு சித்தாந்தம் வரலாறு உண்மையானது என்ற கட்டுரையில் புரட்சி என்பது ஒடுக்கும் வர்க்கத்தின் கையிலிருக்கும் அரசயந்திரங்கள் ஒடுக்கப்படும் வர்க்கம் தன் கைகளில் எடுக்கும் நிகழ்ச்சி என எழுதப்பட்டுள்ளது. இலங்கையில் நடந்த மாகாணசபைத் தேர்தல் மூலம் விடுதலை என்று ஆவேசப்பட்டவர்களும் பங்கு பற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒடுக்கும் வர்க்கத்தின் அரச யந்திரங்களாக மாறியிருக்கிறார்கள். புரட்சிக்கு எதிரான இந்நடவடிக்கையை அரசியல் கருத்தில் ஆதரிப்பதேன்?. நிலப்புரட்சி பற்றிய கட்டுரை 38 பக்கங்களை பிடித்துள்ளது. சிந்தனையின் அளவுக்கு இது அதிகமானதும். இக்கட்டுரையை தொடராக வெளியிட்டிருந்தால் பல ஆக்கதாரர்களுக்கு இடம் கொடுத்து சஞ்சிகையை நிறைவானதாக ஆக்கியிருக்கலாம். இக்கட்டுரையைப் போல முப்பதாவது வருட நிறைவைக் கொண்டாடியிருக்கும், கியூபாப் புரட்சியைப் பற்றியும் விரிவாக எழுதினால் என்போன்றவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

த.வாசகர் வுப்பெற்றல்.

வாசகருக்குப்பதில்.

ஒரு எழுத்தாளனின் எழுத்துக்கள் விமர்சனத்தினை புடம் போடப் படுகின்றன. இந்த வகையில் உங்கள் விமர்சனத்திற்கு எமது நன்றி. எமது மண்ணில் நடப்பவை எல்லாம் உங்களைப் போன்றவர்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும், மஞ்சள் கண்ணாடிகளைப் போட்டிருக்கும் வரைக்கும்.......

சிறைக்கைதிகள் பற்றி...

மகசீன் சிறைச்சாலையில் மட்டுமல்ல மலையகத்திலும் சிந்தனையின் தாக்கத்தை இந்த இதழில் காணலாம்.

சகல விடுதலை இயக்கங்களும் இ.இ. ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டன, மாறிவரக அல்ல. தேர்தலுக்கு முன்பும் பின்பும் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதைபற்றிய பத்திரிகை நறுக்குகளை அவசியமானால் அனுப்பி வைக்கின்றோம். "செய்திகள்" என்ற போர்வையில் தலையங்கச்செய்திகளையெல்லாம் விட்டுவிட்டு தங்கள் அரசியலுக்குத் தேவையான குண்டுவெடிப்புக்களையும் கொலைகளையும் திரித்து எழுதிக்கொண்டிருக்கும் பத்திரிகைகளைமட்டும் படிக்கின்றீர்கள் போலும்...

www.tamilarangam.net

ஆசிரியர் கருத்தும் ஆக்கதாரர் கருத்தும்...

"சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது" என ஆரம்பத்திலிருந்தே நாம் கூறிவருகின்றோம். எல்லோருடைய சுயகருத்துக்களுக்கும் இடமளிப்பது வாசகர்களைக்குழப்புவது என்ற கருத்து எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. எண்ணச்சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம் என்பவை பற்றி உங்களுக்கு என் குழப்பம்?

.. உங்களைப்போன்ற எண்ணங்கொண்டவர்களின் கைகளில் ஆயுதம் கிடைத்த படியால்தான் எமது மக்கள் ஊமைகளாக்கப்பட்டார்கள். எமது கருத்துக்களில் எமக்குத்திடமான நம்பிக்கை இருக்கின்றது. அவற்றை ஆசிரிய கருத்திலும் மற்றைய ஒப்பமில்லாத கட்டுரைகளிலும் வெளியிடுகின்றோம். ஒப்பமிட்டு வரும் ஆக்கங்களில் வரும் கருத்துக்கள் எழுதுபவர்களின் சுதந்திரமான கருத்துக்கள். சகல விடயங்களிலும் சுதந்திரமான, பகிரங்க கருத்துப் பரிமாறல்கள் இடம்பெறவேண்டுமென்ற கருத்துடையவர்கள் நாங்கள். மாற்றுக்கருத்துள்ளவர்கள் எல்லோரும் 'மடையர்கள் பேயர்கள்' என்றும் நாம் எண்ணுவதுமில்லை. மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும். எப்பொருள் யார்வாய்க்கேட்பினும் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

இவற்றையெல்லாம் முன்பு நீங்கள் படித்திருக்கக்கூடும்...

தேர்தல்கள் பற்றி...

சிந்தனையின் கடந்த மூன்று இதழ்களிலும் இந்த இதழிலும் ஆசிரியர் கருத்தில் இக்கேள்விகளுக்கான பதில்கள் எல்லாவற்றையும் எழுதியுள்ளோம். புதினம் தாயகம்போன்றவையும் பொய்மையே கேடயமாக்கிக் கொண்டு இந்தியாவிலிருந்து வரும் சில பத்திரிகைகளை மறுபிரசுரம் செய்யும் சில 'மஞ்சள்' பத்திரிகைகளின் வரிசையில் நாமும் இருக்கவிரும்பவில்லை. எமக்கு மக்களிடமிருந்து கிடைக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரடியான தகவல்களின் அடிப்படையிலும் அவர்களின் வெளிச்செயற்பாடுகளின் அடிப்படையிலும் எமது எழுத்துக்கள் உருவாகின்றன.

தேசவிடுதலையும் புரட்சியும்...

முதலாளித்துவ ஜனநாயகக் கடமையான தேசியவிடுதலைப் போராட்டத்திற்கும் பாட்டாளிவர்க்கப்புரட்சிக்குமிடையில் நீங்கள் குழம்பிப்போய் இருப்பதை உங்கள் கேள்வி காட்டுகின்றது. ஈழவிடுதலைப் போராட்டத்தில் சகலவர்க்கங்களும் ஈடுபட்டாலும் அவற்றிற்கிடையிலான உள்முரண்பாடுகள் தவிர்க்கமுடியாமல் வெடிக்கும். (சிந்தனை தை-89. பக்கம் 6). ஒவ்வொரு கட்டத்திலும் பிற்போக்குவாதிகளை தோற்கடிப்பதற்கான தந்திரோபாயங்களை பாவிப்பது மிகமிக அவசியமாகும். மக்களின் உணர்வுகள், தேவைகள், அவர்களின் அரசியல் வளர்ச்சி, எதிரியின் பலவீனங்கள், யதார்த்தமாகவுள்ளபுறச்சூழ்நிலைமைகள் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு ஒரு அரசியல் இயக்கம் தனது மூலோபாயத்தையடைய, மக்கள் மத்தியில் ஆளமான தளங்களை அமைக்கவும், அவற்றைப்பலப்படுத்தவும், பிரசாரம் செய்யவும் பல்வேறுவிதமான தந்திரோபாயங்களைப் பாவிக்கலாம்.

"இடைக்காலசபை"களில் அங்கத்தானங்களை கேட்டதை விமர்சிக்காதவர்கள் மாகாணசபை வெற்றிகளை விமர்சிக்கின்றீர்கள்! ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம் பற்றி தேர்தல் முடிவுகள் உங்களுக்கு விளக்கியிருக்கும். இறுதியாக நாம் நடுநிலைமைவாதிகளல்ல. முற்போக்குவாதிகளுக்கும் பிற்போக்குவாதிகளுக்குமிடையில், ஒடுக்கப்படுகின்றவர்களுக்கும் ஒடுக்குகின்றவர்களுக்குமிடையில் நடுநிலைமை என்பதற்கு இடமில்லை.

சிறுகதை

உங்கள் விமர்சனத்தை கதாசிரியர் வாசித்தப்பதில் கொடுப்பார் என எதிர்பார்க்கின்றோம்.

மற்றைய உங்கள் அறிவுரைகளுக்கு நன்றி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலக்கிய சந்திப்பு

மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளின் ஆசிரியர்களும், ஆக்கதாரர்களும், வாசகர்களும் ஒன்றாக சந்தித்து உரையாடும் இலக்கிய சந்திப்பு என்னும் நிகழ்ச்சியின் மூன்றாவது தொடர் 18.03.89 அன்று நொய்ஸ் என்னுமிடத்தில் நடைபெற்றது. புதுமை, சிந்தனை, கார்டிக், வெகுஜனம், தேன், எலையா ஆகியவற்றின் சஞ்சிகை ஆசிரியர்களும், ஆக்கதாரர்களும், வாசகர்களும் உட்பட சுமார் 65 பேர் வரை இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

காலை பத்து மணியளவில் திரு. சிறுநிலைநாதனின் ஆரம்ப உரையுடன் இந்நிகழ்ச்சி ஆரம்பமானது. இறுதியாக நடைபெற்று முடிந்த இலக்கிய சந்திப்பின் விமர்சன அறிக்கையை திரு. விஸ்வநாதன் அவர்கள் வாசித்து முடிக்கப் பட்டதும், சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் அறிமுகம் செய்து கொண்டனர். அடுத்து இடம் பெற்ற ஆசிரியர்களின் கருத்தரங்கின் போது சிந்தனை சார்பாக திரு. சிவராஜாவும், புதுமை சார்பாக திரு பாலதிலகராசாவும், கார்டிக் சார்பாக திரு. பார்த்திபனும், தேன் சார்பாக திரு. ஜெமினியும், எலையா சார்பில் திரு. முகுந்தனும், வெகுஜனம் சார்பாக திரு. அ. சுகிர்ப்பிள்ளையும் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

வாசகர் விமர்சனத்தின்போது, ஜேர்மனியில் பொதுவாக சஞ்சிகை ஒன்று எல்லோரும் சேர்ந்து வெளியிட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப் பட்டது. ஆனால் இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்படவில்லை. காரணம், பல வித்தியாசமான

www.tamilarangam.net

குறிப்புக்களை கொண்டிருப்பதால்தான் பலரும் வெவ்வேறான சஞ்சிகைகளை வெளிக்கொண்டு வருகிறார்கள் என்றும், இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு பத்திரிகை வெளி கொணருவது சாத்தியப்படாது என்று கூறப்பட்டது. அடுத்து வந்த விமர்சனத்தின் போது, சில பத்திரிகைகள் தங்கள் கருத்துக்களில் சிலவற்றை மக்களின் மீது திணிக்கின்றன; அத்துடன் பத்திரிகைகள் தங்களுக்கிடையில் மோதல் கொள்வது விரும்பத்தகாதது என்றும், மக்களின் நலனுக்கும் உண்மைச் செய்திகளை பத்திரிகைகள் வெளியிட வேண்டும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப் பட்டன. மேலும் சில சஞ்சிகைகள் உண்மைக்கு மாறான சிலவற்றை எழுதுகின்றன; அத்துடன் இங்குள்ளவர்களை தனை ருக, இழிவாக நிந்தித்து எழுதுகிறார்கள் என்று தெரிவிக்கப் பட்ட கருத்தில் எந்த சஞ்சிகைகள் என்று விளக்கித்தான் கூறவில்லை.

இவற்றிற்கான பதிலின்போது சஞ்சிகைகளின் மோதல் அவற்றின் ஆரோக்கிய வளர்ச்சி என்றும், பத்திரிகைகளில் பல்வேறு கருத்துக்கள் வெளிவருவதன்மூலம் நாம் பலவற்றை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்குமெனவும், சில சஞ்சிகைகள் உண்மைக்கு மாறாக எழுதுவதையோ அல்லது இழிவாக இங்குள்ளவர்களை, நிந்தித்து எழுதுவதையோ விமர்சகர்கள் சுட்டிக்காட்ட முடியாத அளவிற்கு சஞ்சிகைகள் கருத்து தெரிவிப்பவர்கள் மீது அராஜகம் புரிந்தனவா? எனவும் பதில் விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன.

தவிர்க்கமுடியாத காரணத்தினால், இடம் பெறாத சில நிகழ்ச்சிகளுக்காக அவற்றை ஈடு செய்யும் முகமாக பெண் ஒடுக்குமுறை பற்றிய விவாதம் மேற்கொள்ளப்பட்டது. அதில் பல பெண்கள் தங்கள் கருத்தை தெரிவித்தனர். இவ்விவாதத்தில் ஆண்களும், பெண்களும் மாறி, மாறி தங்கள் கருத்துக்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகிர்ந்து கொள்வது வரவேற்கத்தக்கதாக அமைந்தது. அடுத்து புத்தக வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. திரு. கோணேஸ்வரனால் எழுதப்பட்ட "சர்வதேச சக்தி சுரத்தப்பு" என்னும் புத்தகம் வெளியிடப்பட்டது.

அடுத்து இடம் பெற்ற எதிர்கால ஆலோசனை என்ற பகுதியில் திரு. அன்னராசா என்பவர் மேற்கு ஜேர்மனியில் கல்விச்சேவை பற்றி சிறிது நேரம் பேசினார். இலக்கிய சந்திப்புக்களை நீண்டகாலத்துக்கு ஒன்றை தெரிவு செய்யும் யோசனை நிராகரிக்கப்பட்டு, குறுகியகால குழு ஒன்று தீர்மானிக்கப்பட்டது. இந்தக் குழு அடுத்த இலக்கியச் சந்திப்பு நடைபெறும் வரை பதவியில் நீடித்து இருக்குமெனவும் முடிவானது. அத்துடன் அடுத்த இலக்கிய சந்திப்பு வூப்பெற்றால் நகரில் இடம்பெறும் என்றும், இந்த சந்திப்பில் சிறந்தகதை, சிறந்தகட்டுரை, சிறந்தகவிதை ஆகியவற்றிற்கு பரிசளிப்பு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக விக்கிலோகனின் நன்றியுரையுடன், கவிஞர் சேரனின் கவிதாஞ்சலியுடன் நடைபெற்ற இவ்விலக்கியச் சந்திப்பு முடிந்தது.

—ஜெமினி

'சிந்தனை'யில் வெளியாகும் கதைகள், கட்டுரைகள் ஆகியவற்றில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள், அவற்றின் ஆக்கதாரர்களின் கருத்துக்களேயாகும். அவை 'சிந்தனை' ஆசிரிய குழுவின் கருத்துக்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனதன்பின் இசைப்பிரியர்களே,

ஈழத்தில் ஆயிரக்கணக்கான மேடை நிகழ்ச்சிகள் மூலமும், இலங்கை வானொலி மூலமும், ஒரு இசையமைப்பாளராக உங்கள் முன் அறிமுகமான நான் எனது பல கால சிந்தனைக்கு கருத்து வடிவம் கொடுப்பதன் மூலம் மீண்டும் இந்த சர்வதேச சங்கீத சுரத்தட்டு வயிலாக உங்களுடன் கலந்து கொள்கின்றேன்.

ஈழத்தில் இசைக்கலை வளருமா? என்ற சந்தேகம் கொண்டு பார்த்தவர்கள், ஈழத்தில் தரமான பாடல்களை உருவாக்க முடியாது, என்று உறுதிகொண்டிருந்தவர்கள், அநேகர், பிறநாட்டுப் பாடல்களின் எழுச்சியைக் கண்டு மெய்மறந்து ரசித்தவர்கள், நம் நாட்டிலும் அத்தகைய பாடல்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை அடியோடு இழந்திருந்த காலம் அது. ஈழத்து தமிழ் மெல்லிசை உலகம் இருட்டடிக்கப்பட்டிருந்த காலம் அது.

இப்படி ஒரு கால கட்டத்திற்தான் ஈழத்தின் முதலாவது தமிழிசைத்தட்டினை 1971 ம் ஆண்டில் நாம் சுழல விட்டோம். இதைத் தொடர்ந்து இலைமறைகாயாய் இருந்த பல பல கலைஞர்கள் வெளிச்சத்திற்கு வந்தனர். ஈழத்திலும் தரம்மிக்க கலைஞர்கள் உள்ளனர் என்பதும் உறுதியாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து படிப்படியாக இலங்கை வானொலியிலும் ஈழத்துக் கலைஞர்களும் ஊக்குவிக்கப்பட்டனர். ஆனாலும் ஒரு சிலரைத் தவிர பலரும் கேள்வி ஞானத்திலேயே தம் இசை அறிவை வளர்த்துக்கொண்டனர். இவர்கள் அனைவரும் சங்கீதத்தை முறைப்படி கற்க விரும்பாமல் அல்ல, ஆனால் சந்தர்ப்பம், சூழ்நிலை, நல்ல சங்கீதத்தினை படிக்கும் வாய்ப்பு எல்லோரிற்கும், கிடைப்பதில்லை. இப்படி கேள்வி ஞானத்தில் தம் இசை அறிவை வளர்த்திருக்கும் இசைக்கலைஞர்கள் அனைவரும், இன்னும் புதிதாக உருவாக்கப்படும் கலைஞர்களும், எமக்கென்றொரு புதிய பாணியை, எமக்கென்றொரு இசைமுறையை வகுத்துக்கொள்ள வேண்டும், அதுவும் இலகு முறையில் அமையவேண்டும். என்ற ஒரே நோக்கத்துடனேயே தான் இந்த இத்தாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்த சர்வதேச சங்கீத முறையினை எமது பாரம்பரிய சங்கீதமான கர்னாடக இசையையும் ஆதாரமாகக் கொண்டு இந்தப் புத்தகத்தினை எழுதியுள்ளேன்.

கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு, அதிலும் இசைக்கலையைப் பொறுத்தவரையில் இதனை இன்னுமொரு படி மேலே கொள்ளலாம். இசைக்கலை ஒரு கடல் போன்றது. இதனை, இந்த இசைக்கடலை முற்றாக தாண்டியவர் எவருமே இல்லை எனலாம். அதிலும் தமிழர்கட்கே உரித்தான கர்னாடக சங்கீதம் ஒரு பெரும் கடல் போன்றது. அதன் ஆழத்தைக் காண யாராலும் முடியாது. இப்படிப்பட்ட சங்கீதத்தினை, இதன் மகத்துவத்தினை சாதாரணமாக ஒரு இசை முறையை பயில்பவர்களும் ஓரளவு அறிந்திருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளேன். இதே போல் சர்வதேச சங்கீத முறையினையும் ஒரு சாதாரண இசை முறை என்று சொல்ல முடியாது. இங்கும் ராகங்களும், தாளங்களும் வெகு நுட்பமாக கையாளப்பட்டுத்தான் வருகின்றன. ஆனால் பல மணி நேரம் செலவு செய்து, செய்யும் ஒரு வேலையை கொம்பியூற்றர் மூலம் கணப்பொழுதில் செய்வது போல், அந்தனை நுட்பங்களையும், பயில்வதற்கு இலகுவான முறையில் இந்த சர்வதேச சங்கீத முறை அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் கர்னாடக சங்கீதத்தில் உள்ள ராகங்கள், தாளங்கள், இவற்றின் மகிமை உலகத்தில் உள்ள எந்த இசை முறையிலும் இல்லை என்பதை ஆணித்தரமாகக் கூறலாம். ஆகவே தான் இந்த மகிமைகளை சகலரும், அதாவது சாதாரணமாக ஒரு வாத்தியத்தினைப் பயிலும் ஒருவர் கூட, அறிந்திருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்தான் நான் இந்த முயற்சியில் இறங்கியுள்ளேன். இநத எனது முயற்சி பூரணத்துவம் அடைய காலம் பல ஆகலாம், ஆனால் நான் எழுதிவரும் இந்த இசை முறை பிற்காலத்தில் நல்ல பல கலைஞர்கள் உருவாவதற்கு வழிகோலும் என்பதை நிட்சயம் நம்புகின்றேன்.

மேற்படி நான் எடுத்துக்கொண்டுள்ள இந்த முயற்சி மூலம் கண்டிப்பாக பல பல புதிய கலைஞர்கள் உருவாக்கப்படுவார்கள். கேள்வி ஞானத்தில் தம் இசை அறிவை வளர்த்திருப்பவர்களும் நல்ல கலைஞர்கள் ஆவார்கள் என்பது உறுதி. ஒரு ஆசிரியரின் துணையின்றி தாமாகவே ஒரு சுரத்தட்டினை பயிலக் கூடிய விதத்தில் மிகவும் இலகுவாகவும், தனித்தனி விளக்கங்களுடனும் இந்த எனது முதலாவது பாகத்தினை எழுதியுள்ளேன். ஒவ்வொரு புத்தகத்துடனும் அப்புத்தகத்தில் உள்ள பாடல்கள் அடங்கிய ஒவ்வொரு ஒடியோக் கசட் இணைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஒடியோக் கசட்டினதும் உதவியைக் கொண்டு நீங்கள் வெகு விரைவில் வெகு எழிதில் இந்த இசை முறையை கற்றுணர்ந்து கொள்ளலாம்.

மேற்படி நான் எடுத்துக்கொண்டுள்ள முயற்சி முழு வெற்றியடைவதற்கு உங்கள் அன்பும் ஆதரவும் கண்டிப்பாக எனக்குக் கிடைக்குமென நம்புகின்றேன். எனது கடந்த 20 வருட இசை அறிவிற்கு சிந்தனை கொடுத்தே இந்த சர்வதேச சங்கீத சுரத்தட்டு என்னும் நூலை எழுதியுள்ளேன்.

ஈழத்தில் நான் இருந்த போது என்னால் இயன்ற சேவைகளை தமிழிற்கும், தமிழ் இசைக்கும் ஆற்றியுள்ளேன். இதன் பின் மேற்கு ஜேர்மன் வந்தும் என்னால் இயன்ற சேவைகளை தமிழிற்கும் தமிழ் இசைக்கும் ஆற்றியுள்ளதை உங்கள் எல்லோருக்கும் தெரிந்த ...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனது முயற்சியின் ஒரு பகுதியாக மேற்கு ஜேர்மனியில் நொய்ஸ் நகர் வாழ் மக்களுடன் இணைந்து ஆரம்பித்த "அரங்கேற்றம்" பாடசாலையிலே இன்று சுமார் அறுபது பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். அங்கு ஏழு ஆசிரியர்கள் கடமை ஆற்றுகின்றனர். எமது பாரம்பரிய கலைகளான பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம் போன்ற பாடங்கள் முறைப்படி கற்பிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கடந்த 15 வருடங்களாக இங்கு தமிழ் மக்கள் வாழ்ந்தும் இந்த சுற்றாடலில் வாழ்ந்து வரும் தமிழ்ப் பிள்ளைகள் ஒரு தமிழ்ப் பாடசாலை இல்லாது கஷ்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று இந்த "அரங்கேற்றம்" பாடசாலை "ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி" இருக்கும் இந்த வேளையிலே இதனை முறியடிக்க ஒரு சில தீயசக்திகள் தந்துவரும் இடையூறுகள் கொஞ்சமல்ல. இத்தனை கஷ்டங்களையும் தாங்கி, வளர்ந்து வரும் இந்த "அரங்கேற்றம்" பாடசாலைக்கு சகல ஜேர்மன் வாழ் தமிழ் மக்களும் ஒத்துழைப்புத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நான் எனது 16 வது வயதில் பள்ளி மாணவனாக இருந்த காலத்திலேயே இந்த இசை உலகத்தில் காலடி எடுத்து வைத்தேன். நான் இன்று உங்கள் முன் ஒரு சிறந்த இசைக் கலைஞனாகத் திகழ்வதற்கு முதல்க் காரணமாக இருந்து, எனது முயற்சிகளிற்குளிற்குத் தடைபோடாது, மேலும் ஊக்கம் தந்து என்னை ஒரு நல்ல கலைஞனாக்கிவிட்ட எனது தந்தை காலஞ்சென்ற திரு. விபுல பீதாம்பரன் அவர்கட்கும் எனது காலஞ்சென்ற தாயாரிற்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாவேன். அத்துடன் எனது 16 வயது முதல் எனக்கு குருவாகவும், வழிகாட்டியாகவும் இருந்து எனது சகல முன்னேற்றத்திற்கும் காரணமாக் இருந்த பொலீஸ் இன்சப்பிரிவைச் சேர்ந்த திரு. பப்பா மிஸ்கின், எனக்கு கர்நாடக சங்கீதத்தினை புகட்டிய சங்கீத பூசணம் திரு. சங்கரலிங்கம், சங்கீத பூசணம். திரு. செல்வசீராளன் அவர்களும் எனது முன்னேற்றத்திற்கு ஒரு முக்கிய காரணகர்த்தாக்களாவர்.

இன்று நான் உங்கள் முன் ஒரு நல்ல இசைக்கலைஞனாகத் திகழ்கின்றேன் என்றால் அது எனக்கு என்ன இன்று நேற்றுக் கிடைத்த புகழா? விதை போடாது முளைத்த விருட்சமா? எத்தனை ஆண்டுகள், எத்தனை கஷ்டங்கள், அத்தனையும் தாண்டித்தானே இன்று நான் உங்கள் முன் இன்று ஒரு இசைக்கலைஞனாகியுள்ளேன். நான் ஒரு இலட்சியவாதியே தவிர நான் ஒரு அரசியல்வாதி அல்ல. எனது இலட்சியம் தமிழும், தமிழ் இசையுமாகவே தொடரும்.

தாய் நாட்டில் ஒரு இசைக்கலைஞனாக வாழ்ந்த நான் மேற்கு-ஜேர்மன் வந்தும் எனது கொள்கைகளை மாற்றவில்லை என்பது நீங்கள் அறிந்ததே; இனியும் எனது கொள்கையில் எனது இலட்சியத்தில் இருந்து மாறப்போவதும் இல்லை. இன்னும் எனது எதிர்கால முயற்சிகள் யாவும் தமிழும் தமிழ் இசையுமாகவே தொடரும் என்று உறுதி கூறுகின்றேன். எனது அடுத்த எந்த முயற்சிகளும் எந்த அரசியலிற்கு உட்பட்டதாயோ அல்லது அதே நேரம் எந்த அரசியல் சக்திகளிற்கு எதிரானதாகவோ அமையாது என்றும் உறுதி கூறுகின்றேன். கலைஞர்கள் ஒரு சுதந்திரப் பறவைகள். குடத்திற்குள் இருக்கும் விளக்கின் ஒளி வெளியில் தெரியுமா? இதை உணர்ந்து கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொணரவேண்டும். உலகத்தில் உள்ள அனைத்து சக்திகளிற்கும் அப்பாற்பட்டதே இந்தக் கலை. இந்தக் கலையை கட்டுப்படுத்த முனைவது மடமை. முற்றும் கற்ற கலைஞனிலும், தான் கற்ற கலையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கத்தவறின் அவனின் திறமைகள் அழிக்கப்படுவது திண்ணம். தமிழையும், தமிழ் இசையின் வளர்ச்சியையும் விரும்பும் எந்தத் தமிழனும் நிட்சயம் இந்த அழிவை வரவேற்கமாட்டார்கள் என நான் பூரணமாக நம்புகின்றேன்.

கலை உலகம், அது யாரிற்கும் பொதுவான ஒரு தனி உலகம். இங்கு சாதி, சமயம், மொழி என்ற பேச்சிற்கே இடம் கிடையாது. இந்தக் கலை உலகத்தினில் ஒரு இசைக்கலைஞனாகப் பிறந்த எனது கொள்கைகளும், இலட்சியங்களும் இதற்கமையவே தொடரும். இந்த எனது பாதையில் நான் அமைத்த ஒரு பெரிய படியே இந்த சர்வதேச சங்கீத சுரத்தட்டு. இந்த எனது முதலாவது பாகத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு அளிக்கும் பங்கும், அடுத்து நான் உங்களிற்கு அளிக்கப்போகும் இசைப் பாலங்களாக அமையும் என்று உறுதி கூறுகின்றேன். இதனைத் தொடர்ந்து நான் எடுத்து வரும் சகல முயற்சிகளிற்கும் உங்கள் அன்பும் ஆதரவும் நிட்சயம் எனக்குக் கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையோடு உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.

என்றும் உங்கள் அன்புக்கலைஞன்
எம். பி. கோணேஸ்

24.3.1989.
மேற்கு ஜேர்மனி.


"ARANGKEETTAM"
Schützenstelle 2
4052 Korschenbroich 3
West Germany
Telefon 0 21 82 / 5 90 52



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



# ஏழிசை வாத்தியாலயம்

## Dortmund

தொடர்புகளுக்கு . . . .

V.S. SELVARAJAH
DIP. IN MUSIC
TIEFESTRASSE 17
4600 DORTMUND 1
WEST GERMANY
Tel- 0231-831863

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்